# வனபரிபாலனத் திணைக்கள நிதியம் - 2012

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வனபரிபாலனத் திணைக்கள நிதியத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வனக்குற்ற வழக்கு விசாரணைகள் முடிவடைந்து, குறித்த தண்டப்பணம் நீதிமன்றத்தால் வனபரிபாலானத் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட போதும், ஆண்டின் இறுதியில் உத்தியோகத்தர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய அன்பளிப்புத் தொகை கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) நிதிசார் கூற்றுக்களில் 2012 ஆம் ஆண்டின் பொருட்டுப் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 1,687,627 குறிப்பிடப்பட்டிருந்த போதும், 2013 ஆம் ஆண்டின் முதல் 4 மாதத்தில் மாத்திரம் 2012 ஆம் ஆண்டின் பொருட்டுச் சேகரிக்கப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,025,328 ஆகவிருத்தது. அதற்கமைய, நீதிமன்றத் தண்டப்பணமாகப் பெறவேண்டிய தொகை நிதிசார் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இரண்டு நீதி மன்றங்களால் அறவீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்குச் செலுத்தப்படாத ரூபா 54,750 வருமான நிலுவையானது நிதிசார் கூற்றுக்களில். உள்ளடக்கப்படாதிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டினால் விளைந்த மிகை ரூபா 14,946,455 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 22,454,897 ஆகும். இதனால் நிதிசார் விளைவுகளில் 33 சதவீதத்துக்கு நிகரான ரூபா 7,508,442 குறைவு தென்பட்டது. நீதிமன்றத் தண்டப் பணம் 11.13 சதவீதத்துக்கு நிகரான ரூபா 3,108,690 குறைவடைந்தமையும் பரிசாக வழங்கப்பட்ட தொகை ரூபா 2,209,176 மற்றும் பாதுகாப்புச் செலவினம் ரூபா 2,848,594 என அதிகரித்தமையானதும் காரணமாக ஒட்டுமொத்தக் கொடுப்பனவு 72 சதவீதத்தால் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் நலிவுக்கு முக்கிய காரணிகளாக அமைந்தன.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப் பணமாகப் பெறப்பட்ட தொகை ரூபா 25,925,192 ஆகும். இதில் ரூபா 23,000 மீளச் செலுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் 2011 ஆம் ஆண்டின் பொருட்டு பெறப்பட்ட ரூபா 1,078,151 மற்றும் 2012 ஆம் ஆண்டின் பொருட்டுப் பெறவேண்டிய ரூபா 1,687,627 என்பன சீராக்கலுக்குள்ளானதன் பின்னர் மீளாய்வாண்டின் பொருட்டுப் பெறப்பட்ட தண்டப்பணம் ரூபா 26,511,668 ஆகியது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு 1 சதவீதமாகும். மேற்படி 2.2.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் பிரகாரம் இவ்வதிகரிப்பும் மாற்றம்டையலாம் எனக் குறிப்பிடலாம்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீதி மன்றத்தால் அறவிடப்பட்ட தண்டப்பணம் வன நிதியத்தில் செலவு வைக்கப்படுவதில் காலதாமதம் நிலவியது. ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும் பெறப்படவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் பிழையின்றி இனங்காணப்பட்டு அது தொடர்பாகத் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் முறையொன்று கடைப்பிடிக்கப்படவில்லை.

(ஆ) வனக்குற்ற வழக்குகள் முடிவடைந்தபோதும் அவ்வாறான வனக் குற்றங்களைத் தவிர்ப்பதற்கு உதவிய உத்தியோகத்தர்கள் அன்பளிப்பைக்

கோருவதும் கோரப்பட்ட அன்பளிப்பு வழங்கப்படுவதில் தாமதத்தைத் தவிர்த்துக் கொள்வதற்குமான முறையொன்று கடைப்பிடிக்கப்படவில்லை.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

ஒவ்வொரு மாத முடிவிலும் வனக் குற்றங்கள் தொடர்பாக நீதிமன்றங்களில் தீர்த்துவைக்கப்படும் வழக்குகளுக்குரிய, வெகுமதி நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய வருமானம் சம்பந்தமான தகவல்கள் வலய அலுவலகங்களிலிருந்து பெறப்படாது, 23 நீதிமன்றங்களிலிருந்து நேரடியாகப் பெறப்பட்டு வருடாந்த வருமான நிலுவை அறிக்கைகளின் அடிப்படையில் பெறவேண்டிய தண்டப்பணம் கணக்கிலிடப்பட்டிருந்தது.

## 4. கணக்களி தகைமையும் சிறந்த ஆளுமையும்

### 4.1 வருடாந்த செயல் திட்டம்

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 4.2 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

வெகுமதி நிதியத்தில் மீளாய்வாண்டின் பொருட்டு பிற செலவுகள் மற்றும் நீதிமன்ற பயணச் செலவினத்திற்கென வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சிய தொகை நிகர நிதியேற்பாட்டில் முறையே 31% மற்றும் 89% ஆகவிருந்தன. கிரமமான செலவினக் கட்டுப்பாட்டின் காரணமாகவே அத்தொகை எஞ்சியதாகக் காரணம் காட்டப்பட்டது. சட்டத்தை அமுலாக்குகையில் பணியாற்றும் வன உத்தியோகத்தர்களது பணியை மெச்சுவதற்கான நலன்களை அளிப்பதற்காக நிறுவப்பட்ட நிதியத்திலிருந்து வனக் குற்றங்களைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கான செலவினம் மேற்கொள்ளப்படலாகாது என்றும் அவ்வாறாக செலவினம் கட்டுப்படுத்தப்படாது. போயின், நிதியத்தின் எதிர்பார்த்த இலக்கை எய்தமுடியாது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. குறித்த வேறுபாடுகளின் காரணமாக, வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

2012 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது வனபரிபாலன நாயகத்திற்குத் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமானச் சேகரிப்பு

(இ) பணம் வங்கியிலிடப்படல்